## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்
## O.S. No.61/2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10–வது சட்ட விதிகளின் படி திருமதி.சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **ராமலிங்கம்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | **இளயபெருமாள்** | **கிராமம்** | : | |
| **வயது** | : | **67** | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 12.00** | | : | |

**வா.சா.1 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 18.09.2003 அன்று எனது தந்தை இளயபெருமாள் என் பெயருக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன், அந்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) எனது தந்தை இளயபெருமாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன் அந்த இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) காஞ்சிபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.876 /1992 மற்றும் அசல் வழக்கு எண்.1266/1993 ஆகிய வழக்குகளின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் தாக்ல் செய்கிறேன் அந்த தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) தாவா சொத்திற்கான டவுன் சர்வே பீல்ட் ரிஜிஸ்டர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்கிறேன், அந்த டவுன் சர்வே பீல்ட் ரிஜிஸ்டர் மற்றும் வரைபடம் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) கடந்த 20.03.2023 தேதியிட்ட என் பெயரில் உள்ள சொத்துவரி மற்றும் பாதாள சாக்கடை வரி ரசீது தாக்கல் செய்கிறேன், அந்த சொத்துவரி மற்றும் பாதாள சாக்கடை வரி ரசீதுகள் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்/-(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.